திரு. எஸ். இராசாராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேற்கு தஞ்சை மாவட்டத்தில் ஆழ்குழாய் கிணறுகள் அமைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக அமைச்சர் அவர்கள் கூறினார்கள். டெல்டா ஏரியா அல்லாத பகுதிகளிலும் இந்தத் திட்டம் அமல்படுத்தப்படுமா ? சமுதாயக் கிணறுகள், பி.டபிள்யூ. டிபார்ட்மெண்ட் மூலமாக அமைக்க உத்தேசம் உள்ளதா என அறிய விரும்புகிறேன்?

(முற்பகல் 9-40)

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில், காவிரி டெல்டா பகுதிகளான திருவையாறு, கும்பகோணம், திருவிடமருதுர், ஆகிய இடங்களில் முழு அளவிலும், பாபநாசம், வலங்கைமான் ஆகிய இடங்களில் பகுதி அளவிலும், இத்திட்டத்தை மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

திரு. எஸ். இராசாராமன் : தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்திலே இருக்கின்ற டெல்டா பகுதியல்லாத ஏரியாக்களான ஒரத்தநாடு, திருவோணம் போன்ற பகுதிகளில் இந்தத் திட்டம் அமுல்படுத்தப்படுமா என அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : தலைவர் அவர்களே, நான் முன்பே சொன்னது போல் இந்தத் திட்டம் மேற்கண்ட 5 பகுதிகளில்தான் தற்போது அமுல்படுத்தப்படும் என தெரிவித்துக்கொள்கிறேன். இந்தத் திட்டத்தை எங்கே அமுல்படுத்துவது என்பது பற்றிய ஒரு விவரமான அறிக்கையை நிலநீர் தலைமைப் பொறியாளர் அவர்கள் அனுப்பியிருக்கிறார்கள். அவர்களுடைய அறிக்கையின் அடிப்படையில் மேற்கு தஞ்சையில் மேற்படி பகுதிகளில் இத்திட்டம் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆர். எஸ். மங்களம் கண்மாய்க்கு வடபகுதி ஆற்றிலிருந்து வரும் முகப்பில் மணல்மேடு.

494—

*வினா எண் 20616—திரு. செ. சிவசாமி : மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா --

(அ) ஆர். எஸ். மங்களம் கண்மாய்க்கு வடபகுதி ஆற்றிலிருந்து வரும் முகப்பில் மணல்மேடிட்டுக் கிடப்பதால் தண்ணீர் வீணாவதுடன் பக்கத்திலுள்ள விளைநிலங்களும் பாதிக்கப்படுவது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், இது குறித்து அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

1984 மார்ச் 28]

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : (அ) ஆம்.

(ஆ) ஆர். எஸ். மங்களம் கண்மாய்க்கு வடபகுதி ஆற்றி லிருந்து வரும் முகப்பில் கிடந்த மணல்மேடு நீக்கப்பட்டு இப் போது தண்ணீர் இலகுவாகச் செல்வதற்கு வழி செய்யப்பட் டுள்ளது.

திரு. செ. சிவசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர் களே, ஆர். எஸ். மங்களம் கண்மாய்க்கு வரும் வழியில், காட் டாற்று தண்ணீர், பெருகிய நேரத்தில், வரக்கூடிய தண்ணீரால் மருதுவாயல், சேத்திடல் போன்ற பகுதிகளில் அழிவு ஏற்படு கிறது. அதிகமான தண்ணீர் வரக்கூடிய நேரத்தில், விளை நிலங்கள் அத்தனையுமே அழிக்கப்படுகிறது. அந்த முகப்பிலே மணல் சன்னம் சன்னமாகச் சேர்ந்து, தண்ணீர் பரவலாகப் போகின்ற காரணத்தால், அழிவு ஏற்படுகிறது. அந்த அழிவை தடுக்கின்ற முறையில் தடுப்புச் சுவர்கள் கட்டுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : ஏற்கனவே அந்த வட பகுதி ஆற்றுத் திட்டத்திற்கு ரூ. 12,000 செலவு செய்யப் பட்டிருக்கிறது. இந்த வட பகுதி ஆற்றிலிருந்து வரும் முகப்பில் மணல் மேடிட்டு அது நீக்கப்பட்டிருக்கிறது. அடிக்கடி மணல் வருமேயானால், வண்டல் அதிகமாகச் சேரக்கூடிய கால்வாய் பகுதி அங்கு இருக்கும் என்று நம்புகிறேன். அப்படி வந்தால் அதை அகற்றக் கூடிய அளவில், ஆய்வுகள் செய்யப்படும் என்ப தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. செ. சிவசாமி : தலைவர் அவர்களே, வண்டல் சேர்ந்துவிட்டால், அதை அகற்றுவதற்கான ஏற்பாடு செய்யப் படும் என்று அமைச்சரவர்கள் உறுதி சொன்னார்கள். அதை நான் வரவேற்கிறேன். இன்றைக்கு இருக்கக்கூடிய நிலையில் அங்கு அடிக்கடி அழிவு ஏற்படுகிறது. தண்ணீர் பெருகுகிற நேரத்தில் எல்லாம், இந்த இரண்டு கிராமங்களும் அழியக்கூடிய நிலையில் இருக்கின்றன. எனவே இதற்கு தடுப்புச் சுவர்கள் கட்ட ஏற்பாடு செய்வதோடு, வாய்க்கால்கள் அதிகமாக வரண் டிருப்பதன் காரணமாகவும் இந்த மாதிரி மணல் மேடிட்டிருப் பதன் காரணமாகவும் தான் ஆற்றிலே போகக் கூடிய வெள்ளம் முழுவதும் பக்கத்திலே வகிர்ந்து போகக் கூடிய காரணத்தாலும் அழிவு ஏற்படுகிறது. எனவே அந்த ஆற்றை ஆழப்படுத்துவதற் கான ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : தலைவர் அவர்களே' இரண்டு கிராமங்கள் அழிவதைப் பற்றிய எந்தவிதமான விவரமும் தற்போது என்னிடம் இல்லை. அதுபற்றித் தனிக் கேள்வி போட்டால் விவரமான பதில் சொல்கிறேன்.